இந்திய உச்ச நீதிமன்றம்

2020-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15-ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் அசோக் பூஷன்

மாண்புமிகு நீதியரசர் ஆர். சுபாஷ் ரெட்டி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் எம். ஆர். ஷா

குற்றவியல் மேல்முறையீடு எண் 681-682/2020

சரவணன் .....மேல்முறையீட்டாளர்

-எதிர்-

மாநிலத்தின் சார்பாக காவல் ஆய்வாளர் .....எதிர்மேல்முறையீட்டாளர்

குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 – எஸ். 167 - நிபந்தனை இயல்புநிலை/சட்டப் பிணையில் ஒரு தொகையை வைப்பீடு செய்ய விதிக்கப்பட்டது - நிலைத்தன்மை - பிரிவு 167(2) Cr. P.C. இயல்பு பிணை/ சட்டரீதியான பிணையில் விடுவிக்க மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. இருப்பினும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் பிரிவு 437 குவிமுச ஜாமீன் மனுவை பரிசீலிக்கும் போது மேல்முறையீட்டாளரின் மனைவி ரூ. 7,00,000/- வைப்பீடு செய்வதாக வழங்கிய முந்தைய உறுதிமொழியை கருத்தில் கொண்டு, மேல்முறையீட்டாளரை இயல்பு பிணை/ சட்டரீதியான பிணையில் உயர்நீதிமன்றம் விடுவிக்கும் போது ரூ.8,00,000/- நீதிமன்ற நடுவர் முன் வைப்பீடு செய்யவேண்டும். மேலும் தினமும் காலை 10.00 மணிக்கு

சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு புலன்விசாரணைக்காக மறுஉத்தரவு வரும்வரை அறிக்கை செய்ய உத்தரவு. - மேல்முறையீட்டில் கருத்துரைக்கப்பட்டது: மேல்முறையீட்டாளரை இயல்பு பிணை/ சட்டரீதியான பிணையில் விடுதலை செய்யும்போது தொகை ரூ.8,00,000/- வைப்பீடு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை விதித்து உயர்நீதிமன்றம் ஒரு பெரிய தவறு இழைத்துள்ளது - குவிமுச பிரிவு 167(2) படி இயல்பு பிணை/ சட்டப்பூர்வ பிணை பெறுவதற்கு ஒரே தேவை குற்றம் சாட்டப்பட்டவர் 60 அல்லது 90 நாட்களுக்கும் மேலாக சிறையில் இருந்திருக்க வேண்டும், மேலும் விசாரணை 60 அல்லது 90 நாட்களுக்குள் முடிவடையாமல் குற்ற இறுதி அறிக்கை 60 அல்லது 90 நாட்களில் தாக்கல் செய்யப்படாமல் குற்றம் சாட்டப்பட்டவர் இயல்பு பிணை/ சட்டரீதியான பிணை விண்ணப்பித்து பிணையம் வழங்க தயாராக இருத்தல் - சம்பந்தப்பட்டதாக கூறப்படும் தொகையை வைப்பீடு செய்யவேண்டும் என்று வேறு எந்த நிபந்தனையும் விதிக்க முடியாது - இயல்பு பிணை/ சட்டரீதியான பிணையில் குற்றம் சாட்டப்பட்டவரை விடுவிக்கும்போது அத்தகைய நிபந்தனையை விதித்தல் என்பது குவிமுச பிரிவு 167(2) பிரிவின்கீழ் வழங்கப்படும் இயல்பு பிணையின் பொருளையும் நோக்கத்தையும் விரக்தியடையச் செய்யும் - இவ்வாறு ரூ.8,00,000/- வைப்பீடு செய்யவேண்டுமென்று இயல்பு பிணை/ சட்டரீதியான பிணையில் மேல்முறையீட்டாளரை விடுவிக்கும்போது உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவு நிலைக்கத்தக்கதல்ல. அது ரத்து செய்யப்படுகிறது - மேலும் மறுஉத்தரவு வரும்வரை சம்மந்தப்பட்ட காவல்நிலையத்தில் காலை 10 மணிக்கு விசாரணைக்காக அறிக்கை செய்யவேண்டும் என்ற உயர்நீதிமன்றம் பிறப்பித்த நிபந்தனையைப் பொறுத்தவரையில் அதுவும் நிலைக்கத்தக்கதல்ல ஏனென்றால் அது மிகவும் கடுமையானது - மாறாக மேல்முறையீட்டாளர் புலன் விசாரணை அதிகாரியுடன் புலன் விசாரணை முடியும்வரை ஒத்துழைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

மேலும் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் புலனாய்வு/விசாரணை தொடர்பாக எப்பொழுது அழைத்தாலும் ஆஜராகவேண்டும்.

மேல்முறையீடுகளை அனுமதித்து, நீதிமன்றத்தால் கருத்துரைக்கப்பட்டது,

1) இந்த நீதிமன்றத்தின் முன் பரிசீலனைக்காக வைக்கப்படும் குறுகிய கேள்வி என்னவென்றால், மேல்முறையீட்டாளர்-குற்றம் சாட்டப்பட்டவரை 167(2) குவிமுச பிரிவின் கீழ் இயல்பு பிணை/சட்டரீதியான பிணையில் விடுவிக்கும்போது, தொகையினை வைப்பீடு செய்ய வேண்டும் என்று உயர்நீதிமன்றம் விதித்த நிபந்தனை போல் எந்த நிபந்தனையும் விதிக்க முடியுமா. (பத்தி 8) [1041-E].

2) இயல்பு பிணை/ சட்டப்பூர்வ பிணையின் திட்டம் மற்றும் பொருள் மற்றும் நோக்கத்தை கருத்தில் கொண்டு, இந்த நீதிமன்றத்தின் கருத்தானது மேல்முறையீடு செய்பவர் ரூ.8,00,000/- தொகையை வைப்பீடு செய்ய வேண்டும் என்ற இயல்பு பிணை/சட்டரீதியான பிணையில் விடுவிக்கும்போது நிபந்தனை விதித்ததில் உயர்நீதிமன்றம் பெரும் தவறு செய்துள்ளது. உயர்நீதிமன்றம் அவ்வாறு ஒரு நிபந்தனையை நீதித்துறை நடுவர் முன்பு வழக்கமான பிணை மனுவின் விசாரணையின்போது மேல்முறையீட்டாளரின் மனைவி ரூ.7,00,000/- வைப்பீடு செய்வதாக ஒப்புக்கொண்டு தாக்கல் செய்த பிரமாணப்பத்திரத்தை கருத்தில் கொண்டு விதித்துள்ளது. எவ்வாறாயினும் நீதிமன்றத்தால் தீர்ப்பில் கவனிக்கப்பட்ட சங்கிலித்தொடர் தீர்ப்புகளில், குறிப்பாக ராஜேஷ்குமார் பால் வழக்கில் புலன் விசாரணை 60 நாட்கள் அல்லது 90 நாட்களில் முடிக்கப்படவில்லை மற்றும் குற்ற இறுதி அறிக்கை 60 அல்லது 90 ஆவது நாளில் தாக்கல் செய்யப்படவில்லை எனில் குற்றம் சாட்டப்பட்டவர் தவிர்க்க முடியாத உரிமையான இயல்பு பிணை பெற உரிமை பெறுகிறார் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் இயல்பு நிலை பிணைக்கு விண்ணப்பித்து பிணையம் வழங்க தயாராக இருக்கும் நிலையில் இயல்பு நிலை பிணை

பெற உரிமை பெறுகிறார். எனவே பிரிவு, 167(2) குவிமுச பிரிவின் இயல்பு பிணை/ சட்டரீதியான பிணை பெறுவதற்கு ஒரே தேவை குற்றம் சாட்டப்பட்டவர் 60 அல்லது 90 நாட்களுக்கு மேல் சிறையில் இருந்திருக்கிறார் மற்றும் 60 நாள் அல்லது 90 நாட்களுக்குள் விசாரணை முடித்து குற்றபத்திரிக்கை தாக்கல் செய்யப்படவில்லை மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர் இயல்பு நிலை பிணைக்கு விண்ணப்பித்து பிணையம் வழங்க தயாராக இருக்கவேண்டும். கூறப்படும் தொகையை வைப்பீடு செய்வதற்கு வேறு எந்த நிபந்தனையும் விதிக்கமுடியாது. அவ்வாறு இயல்பு பிணை/ சட்டரீதியான பிணையில் குற்றம் சாட்டப்பட்டவரை விடுவிக்கும்போது நிபந்தனை விதிப்பது 167(2) கு.வி.மு.ச.ன்கீழ் இயல்புநிலை பிணையின் பொருள் மற்றும் நோக்கத்தை விரக்தியடையச் செய்யும். (பத்தி 9) [1041-F-H; 1042-A-C].

3) பிரிவு 437 குவிமுச-ன் கீழ் வழக்கமான பிணையினை பரிசீலிக்கும் போதுள்ள சூழ்நிலைகள் இயல்பு நிலை பிணை/ சட்டரீதியான பிணை விண்ணப்பத்தை பரிசீலிக்கும்போது உள்ள சூழ்நிலையிலிருந்து வேறுபட்டவை. மேற்படி சூழ்நிலையில் மேல்முறையீட்டாளரை இயல்பு நிலை பிணை/ சட்டரீதியான பிணையில் விடுவிக்கும்போது ரு.8,00,000/- வைப்பீடு செய்யவேண்டுமென்ற நிபந்தனையானது நிலைக்கத்தக்கதல்ல மற்றும் ரத்து செய்யப்படுவதற்கும் ஒதுக்கி வைக்கப்படுதற்கும் தகுதியானது. (பத்தி 9.2) [1042-F]

4) இப்போது உயர்நீதிமன்றம் விதித்துள்ள நிபந்தனையான, அதாவது மேல்முறையீட்டாளர் காவல்நிலையத்தில் தினமும் காலை 10 மணிக்கு மறுஉத்தரவு வரும்வரை விசாரணைக்காக அறிக்கை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையும் நிலைக்கத்தக்கதல்ல, அது மிகவும் கடுமையானது. பதிலாக மேல்முறையீட்டாளர் புலன் விசாரணை அதிகாரியுடன் புலன் விசாரணை முடிவடைய ஒத்துழைக்க வேண்டும் மற்றும்

அழைக்கப்படும் போதெல்லாம் சம்மந்தப்பட்ட காவல்நிலையத்தில் புலனாய்வு /விசாரணைக்கு ஆஜராக வேண்டும். மீறினால் புலன் விசாரணை அதிகாரி நிபந்தனை மீறியதற்காக பிணையினை ரத்து செய்ய சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தை அணுகலாம். (பத்தி 10) [1042-G-H; 1043-A]

ராகேஷ்குமார் பால் Vs அசாம் மாநிலம் (2017) 15 SCC 67: [2017] 8 SCR 785 – குறிப்பிடப்பட்டுள்ளது.

சார்வுறப்பட்ட வழக்கு

[2017] 8 SCR 785 - பத்தி 6 சார்வுறப்பட்டது.

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: குற்றவியல் மேல்முறையீடு எண்கள் **681-682/2020.**

சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையின் CRL. OP(MD) எண்.6214/2020-இல் 24.06.2020 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவு மற்றும் 27.07.2020 தேதியிட்ட CRL. MP(MD) எண். 3622 /2020, CRL. OP(MD) எண்.6214/2020-யிலிருந்து.

ஜெயந்த் முத்துராஜ் - மூத்த வழக்கறிஞர், ஸ்ரீராம், P.B.ரகுநாத், M.யோகேஷ் கண்ணா, ராஜராஜேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகும் தரப்பினர்களுக்காக ஆஜராகினார்கள்.

இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு **மாண்புமிகு நீதியரசர் எம். ஆர். ஷா அவர்களால் வழங்கப்பட்டது.**

1) அனுமதி வழங்கப்பட்டது.

2) சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைகிளை CRL. O.P.(MD) No. 6214 of 2020-யில் பிறப்பித்த 24.6.2020 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மற்றும் CRL. M.P.(MD) No. 3622 of 2020-யில் 27.7.2020 தேதியிட்ட உத்தரவின்படி மேல்முறையீட்டாளரை இயல்பு பிணை/சட்டபூர்வ பிணையில் விடுவிக்குமாறு ரூ.8,00,000/- (ரூபாய் எட்டு இலட்சம்) குற்ற எண் 31/2019ல் கற்றறிந்த நீதித்துறை நடுவர் எண்.1, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் முன்பு வரவு வைக்க வேண்டும் என்ற உத்தரவினால் மனக்குறையுற்று, அதிருப்தியடைந்ததால் குற்றவாளி இந்த மேல்முறையீடுகளை தொடர்ந்துள்ளார்.

3) மேல்முறையீட்டாளர், கன்னியாகுமரி மாவட்டம், DCB காவல் நிலைய கோப்பில் உள்ள குற்ற எண் 31/2019 இ.த.ச பிரிவு 420க்கான குற்றத்திற்கு 31.01.2020 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். மேல்முறையீட்டாளர் 437 கு.வி.மு.ச பிரிவின் கீழ் பிணைகோரி ஒரு விண்ணப்பத்தினை கற்றறிந்த நீதிமன்ற நடுவர் முன்பு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளரின் மனைவி கற்றறிந்த நடுவர் முன்பு ஒரு பிரமாணபத்திரம் தாக்கல் செய்து ரூபாய் 7,00,000/- (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) செலுத்துவதாகவும், கூறப்படும் தொகையான ரூ.15,67,338/- (ருபாய் பதினைந்து இலட்சத்து அறுபத்தி ஏழாயிரத்து முந்நூற்றி முப்பத்தி எட்டு மட்டும்)-யில் மீதமுள்ள தொகையை 06.04.2020க்கு முன்பாக செலுத்தப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது. எனவே 03.08.2020 தேதியிட்ட உத்தரவின்படி கற்றறிந்த நடுவர் மேல்முறையீட்டாளரை அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ள நிபந்தனையின் பேரில் விடுவித்தார். நிபந்தனைகளில் ஒன்று ரூ.7,00,000/-ஐ நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யுமாறும் மீதித்தொகையான ரூ.8,67,338/-ஐ 06.04.2020க்கு முன்பு வைப்பீடு செய்யவேண்டும் என்று மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிட்டது.

4) கற்றறிந்த நடுவர் மேல்முறையீட்டாளரை பிணையில் விடுவித்து பிறப்பித்த உத்தரவில் உள்ள 2 மற்றும் 3 நிபந்தனைகளால் மனக்குறையுற்று, அதிருப்தியடைந்ததால், அதாவது கூறப்படும் மொத்த தொகையான ரூ.15,67,338/-ல் ரூ.7,00,000/-த்தினை மேல்முறையீட்டாளர் செலுத்தவேண்டும் எனவும், மீதமுள்ள தொகை 06.04.2020க்குள் செலுத்தவேண்டும். மேல்முறையீட்டாளர் உயர்நீதிமன்றத்தை CRL. OP(MD) No. 6214 of 2020 மூலமாக அணுகினார். மேல்முறையீட்டாளர் மாற்றம் கோரி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தை அணுகுவதற்கான உரிமையுடன் அந்த மனுவை தள்ளுபடி செய்தது. மேலும் ஏதேனும் மாற்றம் தேவைப்பட்டால் நீதித்துறை நடுவர் அதை பரிசீலிக்கலாம். அதன்பிறகு மேல்முறையீட்டாளர் கற்றறிந்த செஷனஸ் நீதிமன்றத்தில் CRL. M.P. No. 1695/2020 என்ற ஒரு விண்ணப்பத்தை பிரிவு 167(2) கு.வி.மு.ச.படி இயல்பு பிணை/சட்டரீதியான பிணையில் விடுவிக்கும்படி தாக்கல் செய்தார். மேல்முறையீட்டாளர் சார்பில் வழக்கானது, மேல்முறையீட்டாளர் 31.01.2020 அன்று கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார். சுமார் 101 நாட்களுக்கு மேலாக சிறையில் உள்ளார். விசாரணை முடிவடையவில்லை மற்றும் போலீஸ்தரப்பில் குற்ற இறுதி அறிக்கை 167 கு.வி.மு.ச வில் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலவரையறைக்குள் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி விண்ணப்பம் கற்றறிந்த செஷனஸ் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட காரணமானது மேல்முறையீட்டாளர் ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கமான பிணையானது நீதிமன்றத்தில் ரூ.7,00,000/-த்தினை வைப்பீடு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டது. ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. மேலும் நிபந்தனையை மாற்றியமைப்பதற்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தை அணுகலாம் என்ற சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தபோதும் அவ்வாறு செய்வதற்கு பதிலாக மேல்முறையீட்டாளர் இயல்பு பிணை/சட்டரீதியான பிணை கோரி பிரிவு 167(2) கு.வி.மு.ச.வின் கீழ் விண்ணப்பத்தை

தாக்கல் செய்திருந்தார். எனவே கற்றறிந்த செஷனஸ் நீதிமன்றம் மேற்படி விண்ணப்பத்தை தள்ளுபடி செய்தது.

5) மனக்குறையுற்று மேல்முறையீட்டாளர் உயர்நீதிமன்றத்தை அணுகி மேல்முறையீட்டாளரை இயல்பு பிணை/ சட்டரீதியான பிணையில் விடுவிக்க வேண்டினார். மேல்முறையீட்டாளர் சார்பில் வழக்கானது நீதித்துறை நடுவர் உத்தரவின் அடிப்படையில் நீதித்துறை நடுவர் 437 கு.வி.மு.ச.படி விடுவிக்கும் வழக்கமான பிணைமனுவின் அடிப்படையில் வைப்பீடு செய்யவேண்டிய தொகையை வைப்பீடு செய்யாதது, மேல்முறையீட்டாளர் - குற்றம் சாட்டப்பட்டவர். இயல்பு பிணை/ சட்டரீதியான பிணை பிரிவு 167(2) கு.வி.மு.ச.வின் கீழ் பெறுவதற்கு ஒரு தடையாக இருக்காது. பிரிவு 167 கு.வி.மு.ச. படி இயல்பு பிணை/ சட்டரீதியான பிணை ஒரு கட்டாய பிணையாகும். அது அந்த பிரிவின்கீழ் உள்ள நிபந்தனைக்கு உட்பட்டது. அதாவது புலன்விசாரணை முடிக்கப்படாமல் குற்ற பத்திரிக்கை அறிக்கை புலன்விசாரணை அதிகாரியால் 167 கு.வி.மு.ச.-வில் குறிப்பிடப்பட்ட கால கெடுவுக்குள் தாக்கல் செய்யப்படாமலிருத்தல் என்று சமர்ப்பிக்கப்பட்டது. உயர்நீதிமன்ற 24.06.2020 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவுப்படி அதை ஏற்றுக்கொண்டது. இருந்தபோதும் ஏற்கனவே மேல்முறையீட்டாளரின் மனைவி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கு.வி.மு.ச. 437ன்கீழ் வழக்கமான பிணை விண்ணப்பத்தினை கருத்தில் கொள்ளும்போது கொடுத்த உறுதிமொழி அதாவது ரூ.7,00,000/- வைப்பீடு செய்வது மேல்முறையீட்டாளரை இயல்பு பிணை / சட்டரீதியான பிணையின் கீழ் விடுவிக்கும்போது உயர்நீதிமன்றம் ரூ.8,00,000/- நீதித்துறை நடுவர் வைப்பீடு செய்ய வேண்டும் என்ற நிபந்தனை விதித்தது. அதன்பின்பு மேல்முறையீட்டாளர் Crl, MP(MD) எண். 3622 of 2020 என்ற விண்ணப்பத்தினை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து Crl OP(MD) No. 6214/2020 ல் பிறப்பித்த (b) மற்றும் (d)

படி மேல்முறையீட்டாளர் ரூ.8,00,000/- நீதித்துறை நடுவர் முன்னிலையில் செலுத்தவும். மேலும் மேல்முறையீட்டாளர் தினமும் காலை 10 மணிக்கு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் மறுஉத்தரவு வரும்வரை விசாரணைக்காக அறிக்கை செய்ய வேண்டும் என்ற உத்தரவை மாற்றி அமைக்க கோரப்பட்டது. 27.07.2020 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவின்படி, அந்த மாற்றம் கோரிய விண்ணப்பத்தில் உயர்நீதிமன்றம், மேல்முறையீட்டாளரின் மனைவி கூறப்பட்ட ரூ.32,23,073ல் ரூ.7,00,000/- வைப்பீடு செய்வதாக முன்பு கற்றறிந்த நீதிமன்ற நடுவர் முன்னிலையில் கொடுத்த உறுதிமொழி ஆவணத்தை கருத்தில் கொண்டு 24.06.2020 தேதியிட்ட Crl OP(MD) எண்.6214/2020 பிறப்பித்த நிபந்தனைகள் (b) மற்றும் (d) மாற்றப்பட தேவையில்லை என்று தள்ளுபடி செய்தது. எனவே தற்போதைய மேல்முறையீடு.

6) மேல்முறையீட்டாளர் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டாளரை 167(2) கு.வி.மு.ச.படி இயல்புபிணை / சட்டரீதியான பிணையில் விடுவிக்கும்போது பிறப்பிக்கப்பட்ட நிபந்தனைகள் (b) மற்றும் (d) என்பது 167 குவிமுச பிரிவின் திட்டத்திற்கு முரணானது என்று கடுமையாக சமர்ப்பித்தார். இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட சங்கிலித்தொடர் வழக்குகளில் கவனிக்கப்பட்டுள்ளபடி குற்ற விசாரணை வழக்குகளில் குற்ற விசாரணை முறை சட்டத்தின் திட்டமானது, குவிமுச பிரிவு 167 தனிப்பட்ட மனித சுதந்திரத்துக்கு உரிய மரியாதை கொடுக்க வேண்டும் என்று வரையறுப்பதாக அமைந்துள்ளதாக சமர்ப்பிக்கப்பட்டது. குற்றப்பத்திரிக்கை பொருந்தக்கூடிய 60 நாட்கள் அல்லது 90 நாட்களில் சமர்ப்பிக்கப்படவில்லையெனில் குற்றம் சாட்டப்பட்டவரை காவல்துறை தடுத்து வைக்க முடியாது. இந்த பிரிவானது தனிப்பட்ட சுதந்திரத்துக்கு உரிய அங்கீகாரத்தை அளிக்கிறது என்று சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் ராகேஷ்குமார் பால் /எதிர்/ அசாம் மாநிலம், (2017) 15 SCC 67, வழக்கில் புலன்விசாரணை பொருந்தக்கூடிய 60நாட்கள் அல்லது 90 நாட்களில்

முடிக்கப்படாமல் மற்றும் குற்ற இறுதி அறிக்கை பொருந்தக்கூடிய 60 நாட்கள் அல்லது 90 நாட்களில் தாக்கல் செய்யப்படவில்லை, மேலும் குற்றம் சாட்டப்பட்டவர் இயல்பு நிலை பிணைக்கு விண்ணப்பித்து பிணையம் வழங்க தயாராக இருக்கிறார், குற்றம் சாட்டப்பட்டவர் இயல்பு பிணை பெற தகுதியுடையவர், அதை அரசுத்தரப்போ அல்லது நீதிமன்றமோ விரக்தியடையச் செய்யமுடியாது. குற்றம் சாட்டப்பட்டவர் இயல்பு பிணை பெறுவதற்கு எந்த காரணத்தையும் உருவாக்க வேண்டியதில்லை. பொருந்தக்கூடிய 60/90 நாட்கள் காலாவதியாகிவிட்டதாகவும், குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவில்லையென்றும், அவர் பிணை பெற தகுதியுடையவர் மற்றும் அதை அளிக்க தயாராக இருக்கிறார் என்று மட்டும் குறிப்பிடவேண்டும் என்று கருத்துரைக்கப்பட்டதாக சமர்ப்பிக்கப்பட்டது. எனவே மேல்முறையீட்டாளரை இயல்புபிணை /சட்டரீதியான பிணையில் விடுவிக்கும்போது உயர்நீதிமன்றம் பிறப்பித்த நிபந்தனைகள் (b) மற்றும் (d) பிரிவு 167 கு.வி.மு.ச. திட்டத்திற்கு எதிரானது என்று சமர்ப்பிக்கப்பட்டது.

6.1) மேல்முறையீட்டாளரின் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞரால் சமர்ப்பிக்கப்பட்டது என்னவெனில் மேல்முறையீட்டாளர் மனைவியால் நீதித்துறை நடுவர் முன்பு ரூ.7,00,000/- வைப்பீடு செய்வதாக தாக்கல் செய்யப்பட்ட பிரமாண பத்திரம் மற்றும் மேல்முறையீட்டாளரை ரூ.15,67,338/- வைப்பீடு செலுத்தி விடுவிக்க கற்றறிந்த நீதித்துறை நடுவர் பிறப்பித்த முந்தைய உத்தரவு வழக்கமான பிரிவு 437 கு.வி.மு.ச தொடர்பான உத்தரவு, அது மேல்முறையீட்டாளர் கு.வி.மு.ச.167(2)படி வழக்கு தயாரிக்கப்பட்டால் இயல்புபிணை /சட்டரீதியான பிணை பெறுவதற்கு தடையாக அமையாது. உண்மையில் உயர்நீதிமன்றம் அதை ஏற்றுக்கொண்டு மேல்முறையீட்டாளரை இயல்புபிணை / சட்டரீதியான பிணையில் விடுவித்துள்ளதாக சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் பிரிவு 437 கு.வி.மு.ச பிணை மனுவை பரிசீலிக்கும்போது

மேல்முறையீட்டாளரின் மனைவி ரூ.7,00,000/- வைப்பீடு செய்வதாக வழங்கிய உறுதிமொழியை கருத்தில்கொண்டு ரூ.8,00,000/- வைப்பீடு செய்ய வேண்டுமென்று நிபந்தனை விதித்தது. மேல்முறையீட்டாளரை இயல்புபிணை / சட்டரீதியான பிணையில் விடுவிக்கும்போது பிறப்பிக்கப்பட்ட மேற்படி நிபந்தனை மேல்முறையீட்டாளரை இயல்புபிணை / சட்டரீதியான பிணை வழங்குவதன் சரியான நோக்கத்தையே தோற்கடித்தது. இயல்புபிணை / சட்டரீதியான பிணையில் பரிசீலிக்கும்போது கருத்தில்கொள்ள வேண்டிய மற்றும் சட்டப்பூர்வ தேவை என்னவெனில் குற்றபத்திரிக்கை அல்லது செல்லான் தாக்கல் செய்வதற்கான சட்டபூர்வ காலம் காலாவதியாகிவிட்டது மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் பிணையம் வழங்க தயாராக உள்ளார்.

6.2) மேற்கூறியவைகளை சமர்ப்பித்து இந்த மேல்முறையீட்டை அனுமதிக்குமாறும் மற்றும் 24.06.2020 தேதியிட்ட CRL. OP(MD) எண். 6214 of 2020ல் உயர் நீதிமன்றம் பிறப்பித்த நிபந்தனைகள் (b) மற்றும் (d) பிரிவு ஆகியவைகள் நீக்கவும் கோரப்பட்டது.

7) அரசுத்தரப்பில் ஆஜராகிய திரு. ஜெயந்த் முத்துராஜ், கற்றறிந்த கூடுதல் அட்வகேட் ஜெனரல் எதிர்ப்புக்குள்ளான உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளுக்கு ஆதரவளிக்க முயன்று மேல்முறையீட்டாளரின் மனைவி கூறப்பட்ட ரூ.15,67,338/- ல் ரூ.7,00,000/- வைப்பீடு செய்ய கற்றறிந்த நீதிமன்ற நடுவர் முன் ஒரு பிரமாண பத்திரத்தை தாக்கல் செய்தது உயர்நீதிமன்ற உத்தரவின் நிபந்தனை (b) படி ரூ.8,00,000/- மேல்முறையீட்டாளர் வைப்பீடு செய்ய வேண்டுமென்ற நிபந்தனை பிறப்பிப்பதற்கு காரணமாக இருந்திருக்கலாம் என்று சமர்ப்பித்தார்.

8) அந்தந்த தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்கறிஞர்களின் நீண்ட வாதத்தை கேட்டோம்.

இந்த நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு முன்வைக்கப்படும் குறுகிய கேள்வி என்னவென்றால் 167(2) கு,வி.மு.ச.வின் கீழ் இயல்புநிலை பிணை / சட்டரீதியான பிணையின் மேல்முறையீட்டாளர் - குற்றம் சாட்டப்பட்டவரை விடுவிக்கும்போது உயர்நீதிமன்றத்தால் தொகை வைப்பீடு செய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்ட நிபந்தனை போன்று விதிக்க முடியுமா?

9) அந்தந்த தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்கறிஞர்கள் வாதத்தை கேட்டும் மற்றும் இயல்புநிலை பிணை / சட்டரீதியான பிணை ஆகியவற்றின் பொருள் மற்றும் நோக்கம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு மேல்முறையீட்டாளர் ரூ.8,00,000/- வைப்பீடு செய்ய வேண்டுமென்று இயல்புநிலை பிணை / சட்டரீதியான பிணையில் மேல்முறையீட்டாளரை விடுவிக்கும்போது நிபந்தனை விதித்ததன் மூலம் உயர்நீதிமன்றம் பெரும் தவறு செய்துவிட்டதாக நாங்கள் கருதுகிறோம். உயர்நீதிமன்றம் அவ்வாறு ஒரு நிபந்தனையை நீதிமன்ற நடுவர் முன்பு வழக்கமான பிணை மனுவின் விசாரணைபோது, மேல்முறையீட்டாளரின் மனைவி ரூ.7,00,000/- வைப்பீடு செய்வதாக ஒப்புக்கொண்டு தாக்கல் செய்த பிரமாணபத்திரத்தை கருத்தில்கொண்டு விதித்துள்ளது. எவ்வாறாயினும் இந்நீதிமன்றத்தால் தீர்ப்பில் கவனிக்கப்பட்ட சங்கிலித்தொடர் தீர்ப்புகளில் குறிப்பாக ராகேஷ்குமார் பால் வழக்கில் புலன் விசாரணை பொருந்தக்கூடிய 60 நாட்கள் அல்லது 90 நாட்களில் முடிக்கப்படவில்லை மற்றும் குற்ற இறுதி அறிக்கை 60 அல்லது 90ஆவது நாட்களுக்குள் தாக்கல் செய்யப்படவில்லையெனில் குற்றம் சாட்டப்பட்டவர் தவிர்க்க முடியாத உரிமையான இயல்பு பிணை பெற உரிமை பெறுகிறார் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் இயல்பு நிலை பிணைக்கு விண்ணப்பித்து பிணையம் வழங்க தயாராக இருக்கும் நிலையில் இயல்பு நிலை பிணைபெற உரிமை பெறுகிறார். எனவே 167(2) கு.வி.மு.ச.பிரிவின்படி இயல்பு பிணை/ சட்டரீதியான பிணை பெறுவதற்கு ஒரே தேவை குற்றம் சாட்டப்பட்டவர் பொருந்தக்கூடிய 60 அல்லது 90 நாட்களுக்கு மேல் சிறையில்

இருக்கிறார் மற்றும் 60 நாட்கள் அல்லது 90 நாட்களுக்குள் விசாரணை முடித்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவில்லை மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் இயல்புநிலை பிணைக்கு விண்ணப்பித்து பிணையம் வழங்க தயாராக இருக்க வேண்டும். கூறப்படும் தொகையை வைப்பீடு செய்வதற்கு வேறு எந்த நிபந்தனையும் விதிக்க முடியாது. இயல்பு பிணை/ சட்டரீதியான பிணையில் குற்றம் சாட்டப்பட்டவரை விடுவிக்கும்போது அவ்வாறு நிபந்தனை விதிப்பது 167(2) கு.வி.மு.ச.வின் கீழ் இயல்புபிணையின் பொருள் மற்றும் நோக்கத்தை விரக்தியடையச் செய்யும். ராஜேஷ்குமார் பால் மற்றும் பிற தீர்ப்புகளில் இந்த நீதிமன்றத்தால் கவனிக்கப்பட்டபடி குற்றம் சாட்டப்பட்டவர் கு.வி.மு.ச.பிரிவு 167ன்படி நேரிடக்கூடிய சம்பவங்களான விசாரணை பொருந்தக்கூடிய 60 நாட்கள் அல்லது 90 நாட்களில் முடியவில்லை மற்றும் குற்ற இறுதி அறிக்கை 60 வது அல்லது 90வது நாட்களுக்குள் செய்யப்படவில்லை மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் இயல்புநிலை பிணை விண்ணப்பித்து பிணையம் அளிக்க தயாராக இருந்தால் இயல்பு நிலை பிணை/ சட்டரீதியான பிணை பெறுவதற்கு உரிமையுண்டு.

9.1) இங்கு கவனிக்கப்பட்டபடி மற்றும் எதிர்ப்புக்குள்ளான உயர்நீதிமன்ற உத்தரவுகளின் மூலம் தெரியவருவது உயர்நீதிமன்றம் மேல்முறையீட்டாளரை இயல்பு நிலை பிணை/ சட்டரீதியான பிணையில் விடுவிக்கும்போது கற்றறிந்த நீதித்துறை நடுவர் முன்பு கு.வி.மு.ச பிரிவின் 437-இன் கீழ் வழக்கமான பிணை மனுவை பரிசீலிக்கும்போது மேல்முறையீட்டாளரின் மனைவி ரூ.7,00,000/- வைப்பீடு செய்வதாக தாக்கல் செய்த உறுதிமொழிப்பத்திரத்தினை கருத்தில் கொண்டு ரூ.8,00,000/- வைப்பீடு செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளது. இயல்பு நிலை பிணை/சட்டப்பூர்வ பிணை வழங்கும்போது சம்பந்தப்பட்ட தொகையை வைப்பீடு செய்ய வேண்டுமென நிபந்தனை விதிக்க இது ஒரு காரணமாக இருக்க முடியாது.

9.2) பிரிவு 437 கு.வி.மு.ச.வின் கீழ் வழக்கமான பிணையினை பரிசீலிக்கும் போதுள்ள சூழ்நிலைகள் இயல்பு நிலை பிணை/ சட்டரீதியான பிணை விண்ணப்பத்தை பரிசீலிக்கும்போதுள்ள சூழ்நிலையில் இருந்து வேறுபடுகின்றது. இந்நிலையில் இயல்புபிணை/ சட்டரீதியான பிணையில் விடுவிக்கும்போது ரூ.8,00,000/- வைப்பீடு செய்ய வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட நிபந்தனையானது நிலைக்கத்தக்கதல்ல மற்றும் ரத்து செய்யப்படுவதற்கும் ஒதுக்கி வைக்கப்படுதற்கும் தகுதியானது.

10) இப்போது உயர்நீதிமன்றம் விதித்துள்ள (d) நிபந்தனையானது, அதாவது மேல்முறையீட்டாளர் சம்பந்தப்பட்ட காவல்நிலையத்தில் தினமும் காலை 10 மணிக்கு மறுஉத்தரவு வரும்வரை விசாரணைக்காக அறிக்கை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையைப் பொறுத்தவரையில், அதுவும் நிலைக்கத்தக்கதல்ல, அது மிகவும் கடுமையானது. பதிலாக மேல்முறையீட்டாளர் புலன் விசாரணை அதிகாரியுடன் புலன் விசாரணை முடியும்வரை ஒத்துழைக்க வேண்டும் மற்றும் அழைக்கப்படும் போதெல்லாம் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் புலனாய்வு/விசாரணைக்கு ஆஜராக வேண்டும் மீறினால் விசாரணை அதிகாரி நிபந்தனை மீறியதற்காக பிணையை ரத்து செய்ய சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தை அணுகலாம்.

11) மேலே கூறியவை மற்றும் மேலே கூறப்பட்ட காரணங்களுக்காக தற்போதைய மேல்முறையீடுகள் வெற்றியடையத்தக்கதாகிறது. சென்னை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 24.06.2020 தேதியிட்ட CRL. OP(MD) No. 6214 of 2020 உத்தரவின் நிபந்தனை (b) அதாவது இயல்புபிணையில் மேல்முறையீட்டாளரை விடுவிக்கும்போது மேல்முறையீட்டாளர் ரூ.8,00,000/-த்தினை குற்ற எண் 31/2019 நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் முன்பு வரவு வைக்க வேண்டும்

என்ற உத்தரவு ரத்து செய்யப்பட்டு ஒதுக்கி வைக்கப்படுகிறது. நிபந்தனை (d) அதாவது மேல்முறையீட்டாளர் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் தினமும் காலை 10 மணிக்கு மறுஉத்தரவு வரும்வரை விசாரணைக்காக அறிக்கை செய்ய வேண்டும் என்ற நிபந்தனை மாற்றி அமைக்கப்பட்டு மேல்முறையீட்டாளர் புலனாய்வு முகமையுடன் ஒத்துழைத்து, அழைக்கப்படும் போதெல்லாம் சம்பந்தப்பட்ட காவல்நிலையத்தில் புலனாய்வு/விசாரணைக்கு அறிக்கை செய்ய வேண்டும். ஒத்துழையாமையின் விளைவுகளாக பிணை ரத்து செய்வதும் தொடரும். 24.06.2020 தேதியிட்ட உயர்நீதிமன்ற உத்தரவில் விதிக்கப்பட்ட இதர நிபந்தனைகள் நிலைநிற்கத்தகக்கது.

13) மேற்கூறிய விதிமுறைகளின்படி மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன.

மேல்முறையீடுகள் அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."